RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2223

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

# மாயூரம் முன்சீப் வேதநாயகரின் நீதி நூல் உணர்த்தும் வாழ்வியல் அறம்

மு. கயல்விழி [அ,*]

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்-631501, தமிழ்நாடு, இந்தியா

# Biological virtue embodied in Mayuram Munsif Vedanayakar's book of justice

M. Kayalvizhy [a,*]

[a] Department of Tamil, Pachaiyappas College for Women, Kancheepuram-631501, Tamil Nadu, India
*Corresponding author Email: kayalarul22@gmail.com
DOI: https://doi.org/10.54392/ijot2223
Received: 24-02-2022; Revised: 10-05-2022; Accepted: 12-05-2022; Published: 19-05-2022

**Abstract:** Morality is one of the fundamentals of human life. It is this morality that separates man and animals. When an individual is ethical, the society and country that are dependent to him become moral. But human beings do not follow the moral code at all times and in all circumstances. Murder, robbery, rape, alcohol, prostitution, lying, and fraud have been indelibly imprinted on mankind since time immemorial. Our forefathers have long sought to make man aware of their evils and to bring him to the right path. In that sense Munseep Mayuram Vedanayakam Pillai (1826-1889 AD) wrote a book of justice, that was a magnificent book that taught the Tamils the morals of human life. He is the celebrated son of Goddess Tamil. He was the great person who introduced new literary techniques in the world of Tamil literature after the arrival of the British. Until today, it seems that whole-hearted recognition has not been bestowed for the contributions he has made Goddess Tamil. The reason for this is still not understood till today. The book of justice written by that great person with social concern is a wonderful book that teaches the Tamils, social morals, virtues and well-being. This article explores the virtues of human life that it embodies.

**Keywords:** Munseep Mayuram Vedanayakam Pillai, Book of Justice, Tamil literature, Moral

## முன்னுரை

ஒழுக்கம் என்பது மனித வாழ்வின் அடிப்படையான ஒன்று. மனிதனையும், விலங்குகளையும் இந்த ஒழுக்க நெறிதான் பிரித்துக் காண்பிக்கின்றது. தனி மனிதன் ஒழுக்கமாக இருக்கும் பொழுது அவன் சார்ந்த சமுதாயமும் நாடும் ஒழுக்கமடைகின்றது. ஆனால் எல்லாக் காலத்திலும் எல்லா நிலையிலும் ஒழுக்க நெறியை மனிதர்கள் பின்பற்றுவதில்லை. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, மது, விபச்சாரம், பொய், மோசடி போன்று எக்காலத்திலும், யாராலும் அழிக்க முடியாத பொருண்மைகள் மனிதன் தோன்றிய காலந்தொட்டே இருந்து வருகின்றன. அவற்றின் தீமைகளை மனிதனுக்கு உணர்த்தி அவனை நல்வழிக்கு ஆற்றுப்படுத்த நமது முன்னோர்கள் பலகாலம் முயன்று வந்தனர். அந்த வகையில் முன்சீப் மாயூரம் வேதநாயகம் பிள்ளை (கி.பி.1826-1889) அவர்கள் இயற்றிய நீதி நூல் மனித வாழ்வின் ஒழுக்க நெறிகளைத் தமிழர்களுக்குப் போதித்த அற்புத நூலாகும். அன்னார் தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வராவார். அவர் ஆங்கிலேயர் வருகைக்குப் பின் தமிழ் இலக்கிய உலகில் புதிய இலக்கிய உத்திகளை அறிமுகம் செய்த பெரியாராவார். அன்னார் தமிழ் அன்னைக்கு செய்த அருந்தொண்டுகளுக்கு முழுமையான அங்கீகாரம் இன்று வரை கிடைக்கவில்லை என்றே தோன்றுகின்றது. இதற்கான காரணம் இன்று வரை விளங்கவில்லை. அப்பெருமகனார் சமூக அக்கறையுடன் இயற்றிய நீதி நூல் தமிழர்களுக்கு ஒழுக்க நெறிகளையும் வாழ்வியல் அறங்களையும்

நல்வாழ்வு முறைகளையும் போதிக்கும் அற்புத நூலாகும். அது உணர்த்தும் மனித வாழ்வின் அறங்களைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

## நூல் அமைப்பு

தனி மனித வாழ்க்கை நெறிகளை விளக்கும் இந்நீதி நூல் முதன் முதலாகக் கி.பி. 1859இல் வெளியிடப்பட்டது. பின்னர் கி.பி.1860இல் மறுபதிப்பு கண்டது. இந்நூல் 45 உட்தலைப்புகளையும் 613 பாக்களையும் கொண்டது. இதில் தெய்வம் உண்டு முதலாகத் தாழ்ந்தோர் உயர்ந்தோருக்கு அடங்குதல் முடிய வாழ்க்கை நெறிகளையும் பொய் முதல் பன்னெறி முடிய வாழ்க்கையில் உள்ள தீய வழிகளைக் களைய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தும் கருத்துகளையும் கொண்டுள்ளது. இந்நூலின் அனைத்து இயல்களும் தனி மனிதன் வாழ்வில் கடைபிடித்து உய்ய வேண்டிய வழிமுறைகளைப் பாங்குற எடுத்துரைக்கின்றது (Ramanathan, 1962).

## நீதி நூல் நவிலும் ஒழுக்க நெறிகள்

நீதி நூலில் வேதநாயகர் முதலில் தெய்வம் உண்டென்று வலியுறுத்துகின்றார். தெய்வத்தை நம்புவதால் மனிதன் தெய்வத்திற்கு அஞ்சித் தவறான வழியில் நடக்கமாட்டான் என்று உரைக்கின்றார். இறைவன் உருவமற்றவன் என்றும் அவன் எல்லாம் வல்ல பரம் பொருள் என்றும் உணர்த்துகின்றார். மனிதன் பிறவிப் பெருங்கடல் நீந்திக் கரை சேர இறையருள் அவசியம் என்றும் வலியுறுத்துகின்றார். மனிதனின் கண்கண்ட தெய்வங்களான தாய், தந்தையரைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாதவன் வாழ்க்கையில் உய்யவியலாது என்றுரைக்கின்றார். வாழ்க்கையில் உயர்ந்தோர் தமக்கடுத்து வாழும் தாழ்ந்தோரைத் தாங்குதல் கடமையாகும் என்று வலியுறுத்துகின்றார். அடுத்ததாகக் குரு வணக்கத்தையும் வலியுறுத்துகின்றார். ஞானம் போதிக்கும் ஆசிரியரை வணங்கிப் போற்ற வேண்டும் என்றும் அவ்வாறு இல்லையென்றால் அவன் கற்கும் கல்வி பயனற்றது என்கின்றார். மேலும் ஒழுக்கமற்ற செயல்களின் தீமைகளை எடுத்துரைக்கின்றார்.

பரத்தமை என்ற இயலில் பொருட் பெண்டிரையும் பிறன் மனைவியைச் சேரும் மக்களுக்கு நேரும் துன்பங்களையும் பழிபாவங்களையும் விளக்குகின்றார். பெண்களுக்குக் கற்பு நெறியின் அவசியத்தையும் ஆண்களுக்கு ஒழுக்க நெறியின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றார். இவற்றை உணர்த்தும் வேத நாயகரின் பாடல் வருமாறு:

“உண்டவர் தமைக்கொலும் ஓத வெவ்விடம்

அண்டினோர் தமைக்கொலு மாளி கையினால்

தண்டினோர் தமைக்கொலுஞ் சற்பந் தையலார்

கண்டவர் நினைப்பவர் தமைக்கொல் காலமே”

பொய் சொல்லுபவர்கள் எல்லாத் தீமைகளையும் செய்தவராகின்றனர். அச்செயலே எல்லா அழிவுகளுக்கும் வழிகோலுகின்றது (Kathir Murugu, 2015). எனவே பொய் சொல்லுதலைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். அடுத்ததாகக் களவு செய்தலையும் அதனால் ஏற்படும் தீமைகளையும் விளக்குகின்றார். களவாடல் மனிதனின் எல்லாப் பெருமைகளையும் புகழையும் அழிக்கின்றது. களவினால் தோன்றும் பெரும் கேட்டினை விளக்கும் வேதநாயகரின் பாடல் வருமாறு:

“திலக வாணுதல் தேவியைச் சேயரைப் பிரிந்து

கலக லென்னவே யொலிசெய்மா விலங்குகாற் பூண்டிவ்

வுலகம் ஏசிடச் சிறையகத் துற்றுமண் சுமந்து

சிலுகெ லாமுறல் சிறிதுபொன் திருடலா லன்றோ”

மனிதன் அறிவை மயக்கிப் பேரழிவைத் தருவது மதுவாகும். மது அருந்துவதால் உடல் நலம் குன்றுவதுடன் நற்பழக்கங்கள் யாவும் அவனை விட்டு நில்லாது நீங்கும். உடன் பழிபாவங்கள் வந்து

சேரும். உத்தமரான வேதநாயகர் மது அருந்துதலை கடுமையாக வெறுத்து அதனால் மனிதனுக்கு உண்டாகும் தீமைகளைப் பட்டியலிட்டு கண்டிக்கின்றார் (Vedhanayagam Pillai, 2010).

"சீயென இகழ்தரு தேனுண் போர்களை

நாயெனக் கோகென வாக்கு நாடொறும்

ஆயினை மகளையில் லாங்குந் தான்கொண்ட

சேயிழை யையும்விலை செய்யச் செய்யுமால்"

சோம்பல் என்பது மனிதனுக்கு முதல் எதிரி மட்டுமல்லாமல் அவன் முன்னேற்றத்திற்கு மாபெரும் தடைக்கல்லாகும். உழைப்பே உயிரோட்டம், சோம்பல் மனிதனைக் கொன்றுவிடும். சோம்பித் திரிவோரைத் தீயோர் என்று பழிக்கின்றார். சோம்பலால் வறுமை, பாவம், துன்பம், பழி போன்ற தீமைகள் தானாக வந்து சேரும் என்று வேதநாயகர் எச்சரிக்கின்றார் (Ramanathan, 1962).

"மடிசேரு மவர்க்கொரு நாளுமறல்

விடியாதவர் நெஞ்சிடை வெந்துயரே

குடியாகு மறந்தொடர் குற்றமெலா

நெடிதாக வளர்ந்திடு நிச்சயமே"

மனித வாழ்வின் மிகப்பெரிய தீச்செயலாகச் சினத்தை வேதநாயகர் கருதுகின்றார். சினத்தால் தான் மட்டுமல்லாமல் தன்னைச் சார்ந்தவரும் துன்புற்று அழிவர். சினத்தால் பலவிதக் கேடுகள் மனிதனுக்கு வந்து சேரும். சினத்தின் பெரும் கேட்டைக் கீழ்க்கண்ட அழகான பாட்டின் மூலம் அவர் எடுத்துரைக்கின்றார் (Ramanathan, 1962).

"நாளு நாங்கொளுந் துயர்க்கெலாங் காரண நாடின்

மூளுஞ் சீற்றத்தின் விளைவதா முனிவக முடையோற்

தேளும் பாம்பும்வெஞ் சினவிலங் கினங்களு நனிவாழ்ந்து

ஆளுங் கானில்வாழ் பவரெனத் தினமஞ்சரடைவார்

என்னும் நாம் அடையும் துன்பத்திற்குக் காரணம் சினமேயாம்"

தீயோரைச் சேருபவர்களைத் தீவினைகள் விடாது பின்தொடரும். எனவேதான் வள்ளுவர் போன்ற பெரியோர்கள் தீயோரைச் சாராமையை வலியுறுத்தினர் (Kathir Murugu, 2015). வேதநாயகரும் அவ்வழியேச் சென்று மனிதர்கள் தீயோரைச் சேராமல் இருக்க வலியுறுத்துகின்றார்.

"மணமனை சேர்மண மாலை மாண்புறும்

பிணவனத் தாரிழி வெய்தும் பெற்றியார்

கணமதிற் சேர்ந்தவர் கணங்கொண் டோங்குவர்

குணமிலா ரிணமுறல் குறையுண் டாக்குமே"

மனிதரின் வாழ்நாள் மிகக்குறுகியது. எனவே அவன் வாழும் நாட்களில் இனிய சொற்களை மட்டுமே பேச வேண்டும். தீய கொடுஞ் சொற்களைப் பேசுபவன் விலங்குகளாகக் கருதப்படுகின்றான். இனிய சொற்களைப் பேசுபவனுக்கு எல்லாவித நன்மைகளும் தானே வந்து சேரும். எனவே மனிதன் இன்சொல்லைத் தவிர்த்து வன்சொற்கள் பேசலாகாது என்று கீழ்க்கண்டவாறு வேதநாயகர் அறிவுறுத்துகின்றார் (Kathir Murugu, 2015).

"வன்மொழி யுரைக்கினெதிர் வன்மொழி கிடைக்கும்

இன்மொழி யுரைக்கின்வரு மின்மொழி யெமக்கும்

நன்மொழிக ளேபல விருக்கநவி லாமற்

புன்மொழி யுரைப்பவர்கள் பூரியர்க ளன்றோ"

உலகில் உள்ள தீய பழக்கங்களான சூது, கைக்கூலி(லஞ்சம்) போன்றவற்றை மனிதன் யாண்டும் பின்பற்றலாகாது என்று அறிவுறுத்துகின்றார் (Ramanathan, 1962). கைக்கூலி கொடுக்கும் வழக்கத்தையும் வாங்கும் வழக்கத்தையும் வெறுத்து அதன் தீமைகளை எடுத்துரைக்கின்றார். அவரே உயர் அரசுப்பணி புரிந்ததால் இத்தீமைகளைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். மேலும் பிறரைப் பற்றி புறம் கூறித்திரியும் கயவர் மிருகங்களை விடக் கேவலமானவர் என்றுரைக்கின்றார். பெரியோரைத் துறந்து வாழ்வதானால் ஏற்படும் பெருங்கேட்டைப் பற்றியும் எச்சரிக்கின்றார். பெரியாரைச் சேர்வதே வாழ்வில் உய்வு பெறும் வழி என்று மக்களுக்கு நல்வழி காட்டுகின்றார். உலக வாழ்க்கை நிலையற்றது. நிலையானது பரம்பொருள் ஒன்றே. எனவே உலக வாழ்க்கையின் மீதும் உலகப்பொருட்கள் மீதும் பற்றுக்கொள்ளலாகாது. வாழ்க்கை குறுகியது என்பதால் பிற உயிர்களை எக்காரணம் கொண்டும் துன்புருத்தக்கூடாது. எக்காரணம் கொண்டும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் ஊறு விளைவிக்கலாது என்று ஜீவகாருண்யத்தை என்று வேதநாயகர் வலியுறுத்துகின்றார் (Kathir Murugu, 2015).

மனிதனுடைய உடல் அழியக்கூடியது. எனவே யாக்கையின் மீது ஒருவன் பற்று வைக்கக்கூடாது. பிறருக்குக் கைமாறு கருதாமல் உதவி செய்வதே உலகில் அவனைத் தெய்வ நிலைக்கு உயர்த்தும். பிறர் செய்யும் குற்றங்களைப் பொறுத்தருளல் தெய்வச் செயலாகும். பேருண்டியும் பெருந்துயிலும் மனித உடலுக்கும், உள்ளத்துக்கும் பெருங்கேடு பயக்கும். வாழ்க்கை நிலையற்றது என்னும் பொழுது செல்வச் செருக்கும் அழகென்ற ஆணவமும் அழிவினையேத் தரும் என்று எச்சரிக்கின்றார். மனிதன் நன்னெறிகளுடன் வாழும் வாழ்க்கையே புகழினைத் தந்து அவனுக்கு வீடுபேற்றை நல்கும். மானிட வாழ்வில் அறம்செய்ய வேண்டுவது மிகவும் அவசியம் என்று மக்களை நல்வழியில் வேதநாயகர் கீழ்கண்டவாறு நெறிப்படுத்துகின்றார் (Vedhanayagam Pillai, 2010).

"பசிமிகுந்த பின்நெல்லை விதைப்பதுபோல்
வீட்டில்தீ பற்றிக் கொண்டு
நசியும்போ ததையவிக்க வாறுவெட்டல்
போலும்போர் நடக்குங் காலை
விசிகநூல் கற்கமுயல் வதுபோலுங்
கபமிஞ்சி விக்கிச் சிக்கி
இசிவுகொண்டு சாங்கலத் தெப்படிநீ
யறம்புரிவா யிதயப் பேயே".

## முடிவுரை

உலகில் உள்ள உயிரினங்களில் மனிதனே உயர்வானவன். அம்மனிதனுக்கு உயர்வை நல்குவது ஒழுக்கமாகும். எப்பொழுதெல்லாம் மனிதர்கள் ஒழுக்க நெறியினின்று நழுவிச் செல்கின்றார்களோ அப்போதெல்லாம் பெரியோர்கள் தோன்றி மக்களை நல்வழிக்கு ஆற்றுப்படுத்துகின்றனர். அந்த வகையில் முன்சீப் (நீதியரசர்) என்ற ஆங்கிலேயர் ஆட்சியில் உயர் பதவி வகித்த வேதநாயகம் பிள்ளை அவர்கள் தாழ்ந்து கிடந்த தமிழரின் வாழ்வு உயரவேண்டும் என்று விழைந்து இந்நீதி நூலைப் படைத்தளித்தார். வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் இன்ப துன்பங்களை யாண்டும் துய்த்த அன்னார் தம் கூர்த்த மதியினைக் கொண்டு மனிதர்களை நல்வழிப்படுத்த முயன்றார். அவரின் சமூக அக்கறையும், இனவுணர்வும், உயர் நோக்கும், கூரிய சிந்தனையும் இத்தகைய அரிய நூலை இயற்றத் தூண்டிற்று. ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுத் துன்புற்றுக்கிடந்த தமிழர் ஒழுக்க நெறியினின்று வழுவக்கூடாது என்ற அக்கறையும் கவலையுமே இந்நூல் தோன்றக் காரணமாயிற்று என்று கருத வேண்டியுள்ளது. தமிழில் எத்தனையோ நீதி நூல்கள் தோன்றினாலும் வேதநாயகரின் நீதிநூல் மட்டும் தனிப்பட்டுக் குன்றில் இட்ட விளக்காய் ஒளிர்கின்றது. வேதநாயகர் தமிழுக்கு உருவாக்கியளித்த பல அற்புத இலக்கியங்களில் இந்நீதி நூல் மட்டும் தன் சமூக அக்கறையின் காரணமாக புராதன சிறப்பு மிக்க தமிழிலக்கிய உலகில் அமர இலக்கியமாய் காலத்தை வென்று நிற்கின்றது.

## References

Kathir Murugu, (2015) Mayuram Vedanayagam Pillai Aruliya Neethi Nool, Gowra Puthaga Maiyam, Chennai, India

Ramanathan, P., (1962) Vedhanayagam Pillaiyin Niti Nool Uraiyudan, Tirunelveli Saiva Siddhantha Publications, Tirunelveli, India

Vedhanayagam Pillai, M., (2010) Neethi Nool, Seethai Publications, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

M. Kayalvizhy, Biological virtue embodied in Mayuram Munsif Vedanayakar's book of justice, Indian Journal of Tamil, 3(2) (2022) 11-15. https://doi.org/10.54392/ijot2223